

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்திடும் பாக்கியம்!

'இப்போது' விசுவாசித்தவர்களாகிய நாம் இளைப்பாறுதலில் - **Rest** பிரவேசித்திட முடியும்.... மரித்தபின்பு அல்ல! (எபி.4:3,4) எதை விசுவாசித்திட வேண்டும்? உலகத்தோற்றம் முன்பே 'தம்முடைய கிரியைகளை' நமக்காக செய்து முடித்தார், என்றே விசுவாசிக்க வேண்டும்!

அவ்வாறு விசுவாசித்தவன் அறிந்த உண்மை என்னவென்றால், 'இன்று அவன் செய்திட விரும்பும் சொந்த கிரியைகளை' **(Self Will)** ஒழித்துவிட்டு, தனக்காக தேவன் செய்து முடித்த கிரியைகளில் **(His Will)** ஓய்ந்திருப்பான்! எப்போதெல்லாம் 'சுய கிரியை' நம்மை அலைக்கழிக்கிறதோ, உடனே ஓடிச்சென்று, "தேவனுடைய கிரியையாகி" இளைப்பாறுதலின் கதவை திறந்து பிரவேசித்திடக்கடவோம்! (வச.7) ஒவ்வொரு நாளும் இளைப்பாறுதலில் பிரவேசிக்கும் பாக்கியமே, பாக்கியம்!

*-tr*

பெட்டகம் 38 பிப்ரவரி 2022 பரல்கள் 02



## கிறிஸ்தவம், வாழ வேண்டிய ஜீவியம்!

கிறிஸ்துவல்லாத எந்த சுபாவத்தையும் உதறித்தள்ளுங்கள். மற்றவர்கள் அதை வைத்திருந்தால் அது அவர்களுக்கு இருக்கட்டும், உங்களுக்கு அது வேண்டாம்! நீங்கள் அவரை கிட்டிச்சேர வேண்டுமென்றே தேவன் நோக்கமாய் இருக்கிறார்! அதற்காக, யாரையும் குறைகூறவோ குற்றம் சாட்டவோ வேண்டாம்.... நீங்களோ உன்னத பாதைக்கு தீவிரம் கொள்ளுங்கள்! "கிறிஸ்து உங்களுக்கு வேண்டும்!" அது ஒன்றே உங்கள் நோக்கமும் இலக்காயும் இருக்கட்டும். உங்கள் உள்ளத்தில் அவரே தொடர்ந்து வாசம் செய்திட வேண்டும். ஆம், "கிறிஸ்து ஒருவரே" உங்களுக்கு சம்பூரண நிறைவைத் தந்திட முடியும்!

உங்கள் இருதயத்தை முற்றிலுமாய் பரிசுத்த ஆவியானவருக்கு அள்ளிக்கொடுத்து விடுங்கள்! உங்கள் சிலுவை எத்தனை பாரமாயிருந்தாலும், அதை மகிழ்வுடன் ஏற்று குருவைப் பின்பற்றுங்கள்! மற்றவர்களுக்கு அது எளிதாய் இருக்கட்டும்.... உங்களுக்கு அல்ல! தவறியே ஆயினும் பிறர்மீது சிலுவையை வைத்துவிடாதீர்கள்!! இவை அனைத்தும் நாம் வாழ வேண்டிய கிறிஸ்தவ ஜீவியம்!!

*-Ed*

### 2022 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.150/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு பிப்ரவரி 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.125/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.900/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## உயிருள்ள விசுவாசம் வேண்டும்!

*"கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்..... இனி ஜீவிப்பது நானல்ல" கலாத்தியர் 2:20 (விரிவாக்க ஆங்கில வேதாகமம்). இந்த வசனத்தின் மகத்துவத்தை எண்ணிப் பாருங்கள். ஒருவன் தேவனிடத்தில் இளைப்பாறுதல் கண்டடைவதற்கு இந்த வசனமே முக்கிய பங்காய் திகழ்கிறது! நீங்கள்* **இந்த வசனத்தை அப்படியே விசுவாசிக்கிறீர்களா?** *அப்படியானால் இந்த வசனத்தின் பின்னால் மறைந்திருக்கும் மிகப் பெரிய ஆதாயத்தை நீங்கள் கண்டிப்பாய் கண்டடைவீர்கள். ஆம், நீங்கள் "தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பீர்கள்!" என்பதே அந்த ஆதாயம்! ஆனால், நான் இங்கு வருத்தத்தோடு சொல்லும் செய்தி என்னவென்றால் "இந்த வசனத்தை அநேக கிறிஸ்தவர்கள், விசுவாசிக்கவில்லை!" என்ற துயரமேயாகும். இந்த அருமையான விசுவாசத்திற்குப் பதிலாக, இந்த வசனத்தை விளக்கிக் கூறி பிரசங்கிப்பதற்கு கூட்டம் கூட்டமாய் பிரசங்கிகள் நின்று கொண்டிருக்கிறார்கள்!*

> **இயேசு கொண்டு வந்த மகிமையான சுவிசேஷத்தை விளக்கிப் பேசி தீர்த்துவிட்டு, சிறிதுகூட பலனை அடையாமல், பூட்டிய கதவிற்கு வெளியே நிற்கிறார்கள். அதாவது "அவர்களே அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்காமல்" வெளியே நின்று மடிந்து போகிறார்கள்!**

*கொஞ்சம் விழித்துக்கொள்ளுங்கள்! இனியும், காலமெல்லாம்* **இளைப்பாறுதலற்ற சுய-வழி ஜீவியத்தில்** *தங்கிவிடாமல், இன்றாவது தேவன் வைத்திருக்கும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திட வேண்டுமே என உங்கள் மனம் தவிக்க வேண்டாமா?*

> **இளைப்பாறுதல் அறைக்குள் பிரவேசித்திட உங்களுக்கு விசுவாசம் இல்லாமல், ஏன் அவிசுவாசம் ஏற்பட்டது? எபிரெயர் 3:12-ம் வசனம் கூறுகிறபடி, 'பொல்லாத இருதயமே' உங்கள் அவிசுவாசத்திற்கு காரணம் என்பதை, இன்று அறிந்துகொள்ளுங்கள்!**

*உங்கள் அவிசுவாசத்தினால், உங்கள் அலைமோதும் நிம்மதியற்ற வாழ்வை எண்ணிப்பாருங்கள்! இன்றாவது, தேவன்*

*வழங்கும் இளைப்பாறுதலின் அறைக்குள் "விசுவாசத்தால் நிறைந்து" பிரவேசித்திட வாருங்கள்!*

*நீங்கள் மனம்திரும்பிவிட்டீர்களா? அப்படியானால் "உங்கள் பழைய மனிதன் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப் பட்டான்" என்ற* **ரோமர் 6:6 –ம் வசனத்தின் மீது ஓர் உயிருள்ள விசுவாசம் வைத்திட** *இன்னமும் ஏன் தயங்குகிறீர்கள்? இன்றுவரை, நிம்மதியற்ற, இளைப்பாறுதல் இழந்து வாழ்கின்ற வாழ்க்கைக்கு, உங்களின் 'பழைய மனிதனே' காரணம்! இன்று முதல், வசனத்தில் உறுதியாய் நிலைகொண்டு, பழைய மனிதனை தீர்மானத்துடன் புறக்கணிப் பவர்கள் யாராயிருந்தாலும், நிச்சயமாய் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்!! இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்..... உங்களுக்கு இன்னமும் புரியவில்லையா? உங்களுக்குப் புரியும்படி, ஓர் உயிரோட்டமான நிகழ்ச்சியை நான் உங்களுக்கு கூறுகிறேன். அப்போதாவது, நீங்கள் விசுவாசம் கொண்டு இளைப்பாறுதலை கண்டடைவீர்கள் என நான் நம்புகிறேன்.*

**எங்கள் வீட்டின் அருகில் உள்ள ஒருவர் மரித்துவிட்டார்! இதுவே நான் உங்களுக்குச் சொல்ல நினைத்த நிகழ்ச்சி! அவரை வைத்த சவப்பெட்டியின் மேல் என்ன எழுதினார்கள் தெரியுமா? "இந்த கனவான், இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டார்!" என எழுதி வைத்தார்கள். இப்போது சத்தியம் உங்களுக்குப் புரிகிறதா?**

*ஆம், நிம்மதியற்ற வாழ்க்கைக்கு காரணமான உங்கள் பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையுண்டு சாகட்டும்! உங்களை தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.... இந்த நிமிடமே கலாத்தியர் 2:20ம் வசனத்தையும் ரோமர் 6:7ம் வசனத்தையும் புரட்டி இப்போதே வாசியுங்கள். உங்கள் நிம்மதியைப் பிடுங்கி சீரழித்த பழைய மனிதனை உதறித்தள்ளி, சிலுவையில் ஆணியடித்து..... "நீ சாகக்கடவாய்!" எனக் கூறுவது எத்தனை பேரின்பம்! எத்தனை பெரிய இளைப்பாறுதல்! ஆம், மரித்தவன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பான்!!*

**இந்த சரீரத்தில் நான் பிழைத்திருக்கும்போதே, மரித்திட முடியும்! என்பதே உயிருள்ள விசுவாசம். ஆனால் அவிசுவாசம் கொண்டவர்களுக்கோ, இது ஒரு புரியாத இரகசியம்!**

*பழைய மனிதனை சிலுவையில் அறைந்து, அவனோடு இசைந்து வாழ்ந்த பாவத்திற்கும் மரிப்பது, என் இருதயத்திற்கும் மனதிற்கும் இளைப்பாறுதலைப் பெறுவது பாக்கியமல்லவா! 'சுவிசேஷத்தின் இந்த ஆச்சரியம்' இன்னமும் உங்களுக்கு கைகூடாமல் வாழ்வது துயரம் அல்லவா! இந்த சாவுக்கு ஈனமான சரீரத்தை நான் இன்னமும்*

*சுமந்திருந்தாலும்..... அதே வேளையில், நான் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திடும், உயிருள்ள விசுவாசத்திற்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்! இந்த பாக்கியம், உங்கள் யாவருக்கும் கிட்டுவதாக!! ஆமென்.*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## ஆழ்ந்த ஜீவியமா? பரிபூரண ஜெய வாழ்க்கையா?

*'ஆழ்ந்த ஜீவியம்' பேசுவோர் நாங்கள்! எனக்கூறுபவர்கள் யாரோ சில குழுக்கள் மாத்திரமே என எண்ணாதிருங்கள். ஏனெனில், ஆழ்ந்த ஜீவியம் என்பதைக் காண்பித்து 'அதை தங்களுக்கே உடைமை போல்' கூறிக்கொள்வோர் பலர் இருக்கிறார்கள். ஏனென்றால், புதிது புதிதாகத் தோன்றும் அனைத்து குழுவினருமே* **'ஆழ்ந்த ஜீவியம்' என்ற பதத்தைக் காண்பித்து** *தங்களுக்கென்றே குழுக்களைச் சேர்க்க ஆரம்பிக்கிறார்கள். இவ்வித குழுக்களை உருவாக்குகிறவர்கள், எளிய கிறிஸ்தவ அனுபவம் கொண்ட மக்களையே 'முரட்டாட்டத்தை ஊக்குவித்தோ' அல்லது ஆவிக்குரிய தங்கள் ஜீவியத்தில் உற்சாகமிழந்த ஆத்துமாக்களை வசப்படுத்தியோ தங்கள் குழுவிற்கு வர ஈர்த்துக் கொள்கிறார்கள்!*

*கிறிஸ்தவர்களாய் இருக்கும் அநேகர் 'ஆழ்ந்த ஜீவியம்' என்ற பதத்தால் ஈர்க்கப்படுவது ஏன்? அதுஏனென்றால் இப்போதுள்ள அவர்களின் ஆவிக்குரிய நிலைமை, அவர்களுக்கே திருப்தியாக இல்லை என்ற காரணமேயாகும்! அவ்வாறு ஈர்க்கப்பட்ட அநேகர், சிலகாலம் கழித்து, 'ஆழ்ந்த ஜீவியம்' என கூறி கொண்ட குழுக்கள், தங்களைவிட மேலானவர்கள் இல்லை என்பதை உணர்ந்தார்கள்!*

**இவர்கள் ஏன் இப்போது ஏமாற்றம் அடைந்தார்கள்? 'ஆழ்ந்த ஜீவியம்' என இவர்கள் எதைப் பேசுகிறார்கள்? அவ்வாறு அவர்கள் பேசியது பரிசுத்த வேதாகமத்தில் எங்கே எழுதப்பட்டுள்ளது? பேசியவர்களின் ஜீவியம் எப்படி? என்பதையெல்லாம் நிதானித்துப் பார்த்த பிறகே ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.**

*ஆழ்ந்த ஜீவிய பதத்திற்குப் பதிலாக 'ஆவியில் நிறைந்த பூரண ஜீவியம்' என்றே நாம் அர்த்தம் கொள்ளலாம். அந்த ஜீவியம், இன்றைய சராசரியான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு மேலாகவும், புதிய ஏற்பாடு சுட்டிக்காட்டும் ஜீவியத்திற்கு ஒப்பானதுமேயாகும். ஆதி உயர்ந்த நிலையில்* **வாழ்ந்த பரிசுத்தவான்கள்** *பேசியதைப்போல் இல்லாமல், தங்கள் நடைமுறை ஜீவியத்தில் வெறுமையாயிருக்கும் 'வேத பண்டிதர்கள்' உயர்ந்த பதத்தைக் கூறி போதித்தாலும்*

பொருளற்றதாகவேயிருக்கிறது! ஒருவர் தம் குறைவான ஜீவிய அனுபவத்தோடு வேத வாக்கியத்தை இணையாக்கிட முயற்சிப்பதை, நாம் ஏற்றுக்கொண்டால் 'அது, நம்மேல் விழுந்த தண்டனையாகவே' இருக்கிறது.

**இதற்கு மாறாக, நம்முடைய அனுபவத்தை தேவனுடைய வார்த்தைக்கு இணையாக கொண்டு வர முயற்சிப்பதே உத்தம கிறிஸ்தவமாகும்!**

இதனிமித்தமே, கீழ்த்தரமான ஆவிக்குரிய ஜீவியத்தை வைத்துக் கொண்டு, 'உயர்ந்த ஆவிக்குரிய தன்மையை' ஒப்பிட்டு பேசுவதை காணும்போது, நாம் துயரத்தோடு அவர்களைவிட்டு விலகுவதே நல்லது!

*ஆழ்ந்த ஜீவியம் என்பதற்கு பதிலாய், "ஜெய வாழ்க்கை" (Victorious Life) என இப்போது மாற்றி அழைத்திட முயற்சிக்கிறார்கள். இதுவும், ஓர் நிறைவான தலைப்பு அல்ல. தனிப்பட்ட கிறிஸ்தவ ஜீவியத்தில் 'பாவத்தை ஜெயிப்பது' என்ற ஒரே தரம் மாத்திரமே ஜெய ஜீவியம் அல்ல! பாவத்தை ஜெயிப்பது, ஜெய ஜீவியத்தின் முக்கியமானதுதான்! ஆனால் அது, ஒரே ஒரு பகுதி மாத்திரமேயாகும். ஏனெனில்,* ***ஆவியில் நிறைந்த ஜீவியம்*** *பாவத்தை ஜெயித்திடும் ஜீவியத்தைவிட விஸ்தாரமானதாகும். அந்த ஜீவியத்தின் விஸ்தார மடல்கள்* ***1.*** *கிறிஸ்துவுக்குள் நிலைத்த ஜீவியம்.* ***2.*** *தேவனைக் குறித்த உணர்வில் மாறாத ஜீவியம்.* ***3.*** *அவரில் களிகூரச் செய்யும் ஆராதனை.* ***4.*** *உலகத்தை விட்டு வேறு பிரிந்த ஜீவியம்.* ***5.*** *சகலத்தையும் தேவனிடம் மகிழ்ச்சியுடன் அர்ப்பணிக்கும் ஜீவியம்.* ***6.*** *பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகிய மூவரோடும் இணைந்த ஐக்கியமான ஜீவியம்.* ***7.*** *தேவனுடைய பிரசன்னத்தில் பழகும் ஜீவியம்.* ***8.*** *அநேக பரிசுத்தவான்களோடு ஐக்கியப்படும் ஜீவியம்.* ***9.*** *தேவனை நெருங்கிச் செல்லும் ஜெப வாழ்க்கை! ஆகிய, இவையாவும் அடங்கியதல்லவோ மெய்யான ஜெய ஜீவியம்!*

இத்தனை மகத்துவமான **பரிபூரண ஜெய வாழ்க்கைக்குள்,** நீங்கள் பிரவேசிக்க வேண்டுமென்றால், ஆவிக்குரிய அனைத்து விஷயங்களுக்கும் முடிவான அதிகாரம் புதிய ஏற்பாடு என்பதை, யாதொரு கேள்வியும் கேட்காமல், முழு மனதோடு ஏற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும்! அதுபோலவே, **உங்கள் ஜீவியத்தை ஆளுகை செய்து நடத்திட "கிறிஸ்து ஒருவர் மாத்திரமே" மேலான நாமமுடைய ஆண்டவராயிருக்க வேண்டும்!** அதன்பின்பு, தங்கள் முழுமையையும் **1.** தங்கள் பாவங்கள் **2.** தங்கள் சுய நீதிகள் **3.** இதற்கு முன்பு எவைகளெல்லாம் தங்களின் பெருமைக்குரியதாய்

*இருந்ததோ, அவைகள் அனைத்தையும் "அழித்திட வல்லமையுள்ள" சிலுவையின் வல்லமைக்கு கீழாக கொண்டுவந்து, 'அவைகள் சாகும்படி' ஒப்புக்கொடுத்திடவும் வேண்டும்!*

*மேல் கூறப்பட்ட அனைத்தும், மிக பாரமான தியாகம் என உங்களுக்குத் தோன்றினால்..... 'கிறிஸ்துவே உங்கள் ஆண்டவர்' என்பதையும், அவர் தெரிந்து கொண்ட எதை வேண்டுமானாலும் உங்களிடத்தில் கேட்க அவருக்கு உரிமை உண்டு என்பதையும் நினைவுகூரக்கடவோம்.*

**நம் சுயத்தை வெறுத்து, ஒவ்வொரு நாளும் சிலுவை எடுத்து வர வேண்டும் என்று கூட நம்மிடத்தில் கேட்பதற்குரிய உரிமை கொண்டவரே "நம் கிறிஸ்து ஆண்டவர்!".**

*சிலுவையின் மகிமையான செயலுக்குப் பிறகு பொழிந்திடும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், எவைகளையெல்லாம் சிலுவை பாதையில் அவர் எடுத்துக்கொண்டாரோ, அதற்கு பதிலாக, பன்மடங்கு மேலாய் நம் ஆத்துமத்திற்குத் தேவையான ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்து தந்திடுவார்! இந்த சிலுவையின் வழி கடினமானது போல் தோன்றினாலும், அதுவே மகிமை நிறைந்த வழியாகும்!* **"பரிசுத்த ஆவியின் இனிமையை அறிந்தவர்கள்"** *அவருடைய செயல் யாதொன்றையும், குறைகூற மாட்டார்கள்! எவைகளெயெல்லாம் சிலுவையில் இழந்தார்களோ, அது அவர்கள் நினைவில் இருப்பதில்லை. அதுஏனென்றால் "அவர்களுக்கு ஆதாயமாய் கொடுக்கப்பட்டவைகளைக் கண்டு" சொல்லி முடியாத மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்!*

*- A.W.டோசர்*

---

## தெய்வ அன்பை இழப்பது, உயிரை இழப்பதற்கு சமம்!

**தே***வன் மீது நேசம் கொண்டு வாழ்ந்த என்னை, எனது 13-ம் வயதில் இந்த உலகம், மீண்டும் மீண்டும் மாயையான அன்பைக் கொண்டு என்னை கவர்ந்திழுப்பதைக் கண்டேன். தெய்வ அன்பைவிட்டு என்னைப் பிரிக்க முயற்சித்த மாய அன்பின் முகப்பில் நின்று, தேவனை நோக்கி கதறினேன்! இவ்வாறு தேவனிடத்தில் கதறும் தெய்வ பயமும், தாழ்மையும் இருக்கும் இடத்தில், தேவன் நிச்சயமாய் தமது 'நேரான' வழியை நமக்கு போதிப்பார்!!*

*மாய அன்பின் பிடியிலிருந்து நான் மனந்திரும்பிய பிறகுதான் "தேவன் அன்பாகவே இருக்கிறார்!" என்பதின் பொருளை நான் கற்றுக் கொண்டேன். தேவன் ஒரு மனிதனை நேசிக்கும் போது, அந்த*

மனிதனை நேசிப்பதற்குரிய காரணங்களை அவர் தேடுவதில்லை!

**தேவன் நம்மில் எவ்வாறு அன்புகூருகிறார்? அது ஏனெனில், தேவனுடைய இருதயமே அன்பினால் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்ற ஒரேயொரு காரணமேயாகும்.!**

விசுவாசிகளாகிய நீங்களே கூறுங்கள்: "அவரே உங்களை சிருஷ்டித்தார்...... அவரே உங்கள் பாவங்களுக்காக மரித்தார்! அப்படியிருக்க, உங்களை எப்படி அன்புகூராமல் இருப்பார்?..... **இந்த உண்மையை** உங்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறதா?" இவ்வாறு, **அவரது தெய்வ அன்பு** இன்னதென்பதை உங்களால் அறிய முடியவில்லையென்றால்..... உங்கள் வாழ்வில் துன்பமும், நஷ்டமும் ஏற்படும்போது, உங்கள் விண்ணப்பத்தை அவரிடம் விசுவாசத்தோடு கூறி உங்களால் எங்ஙனம் ஜெபிக்க முடியும்?

**'அன்பே பிரதானமானது' என நாம் அறிந்திருக்கிறோம். தேவனை அன்பு கூருவதும், பிறரை அன்பு கூருவதும் ஆகிய இந்த அற்புத செயல் நம்மில் ஒருவருக்கும் தூரமானது அல்ல. அது ஏனென்றால், நம்மில் எல்லோருக்கும் இருதயம் உள்ளது! இருதயம் இல்லாமல் ஒருவரும் வாழ இயலாது. அதுபோலவே அன்பில்லாத இருதயமும் பிழைத்திருக்க இயலாது!!**

'உயிரைப் போன்று உள்ள அன்பை' நான் ஏன் நாடி வாஞ்சிக்க வேண்டும்? என ஒருவன் கேட்பது தகுதியான கேள்வி அல்ல. யாதொரு கேள்வியும் கேட்காமலே, பிறரிடம் அன்புகூர நாம் பழகுவோமாக. மெய்யான அன்பிற்கு முன்பாக 'காரணங்கள்' நிலை நிற்பதில்லை. நான் ஏன் அன்பு கூர வேண்டும்? என்ற முட்டுக்கட்டை போடும் காரணங்கள் விலகி விட்டால், **தேவ அன்பு** நம்மை நிறைத்துவிடும்! இவ்வாறு மிக எளிய விதத்தில் அன்புகூர முயற்சித்துப் பாருங்கள். அப்பொழுது, ஒரு 'தத்துவ ஞானி' கூட அடைந்திட முடியாத மேன்மையை நீங்கள் அடைந்திடுவீர்கள்.

**தூர்ந்து போன மனுஷீக அன்பின் துரவுகளில் பானம் செய்வதை விட்டுவிட்டு, ஜீவ நதி புரண்டோடும் திவ்விய ஊற்றண்டை தாகம் தீர்க்க வாருங்கள்!**

இந்த ஜீவ ஊற்றை கண்டடைந்தவன், அதை விட்டுவிட்டு மாய அன்பிற்கு ஒருபோதும் செல்லமாட்டான். ஆகிலும், இந்த ஜீவநதியின் ஊற்றைக் கூட அற்பமென புறக்கணித்தவர்கள் இருக்கிறார்கள். இந்த வீழ்ச்சியின் தக்க தருணத்தில், உலக சினேகத்தை பிசாசானவன் தித்திப்பானதாக அவர்களுக்கு காட்டுகிறான். ஆனால்,

*அந்த 'தித்திப்பின் சுவை' நிலைத்திராமல், முடிவில் அவர்களுடைய ஜீவனையே பறித்து கசப்பில் மாற்றுவது நிச்சயம்!*

*ஜெப நேரமே, ஜீவ ஊற்றுக்கண் நெருங்கிச் சேரும் நேரமாகும். ஆம், நான் என்று என் ஜெப நேரத்தை உதாசீனம் செய்தேனோ, அன்றே "ஜீவ ஊற்றுக்கண்ணும்" என்னைவிட்டு பறிபோனது! இந்த அனுபவத்தை ஒரேயொரு முறைதான் அனுபவித்தேன். அந்த அனுபவம் என்னை வாட்டி வதங்கச் செய்தது. என் நேசரோடு தங்கி தாபரித்த அழகு திராட்சத்தோட்டத்தின் வேலி சிதையுண்டு, பாதுகாக்கப்பட்டிருந்த எனது ஆவிக்குரிய திராட்சை கனிகளும் மண்ணில் வீழ்ந்து போனது. முன்பு நான் தேவனிடத்தில் கண்டடைந்த நிறைவான அன்பையும், ஆறுதலையும் 'மனுஷரிடத்தில்' தேட துவங்கினேன். நான் அவரை விட்டுவிட்டப்படியால், தேவனும் என்னை விட்டுவிட்டார்! இதன் மூலம் ஒரு மாறாத பாடத்தை நான் கற்றுக் கொண்டேன். அது என்னவெனில், தேவனுடைய பாதத்தை நெருங்கிவரும் ஜெபம் இல்லையென்றால், நான் வாடி வதங்குவேன் என்ற உண்மையை உறுதிபட கற்றுக்கொண்டேன்!*

**தேவன் நம்மை விட்டு முதலாவது என்றுமே விலகுவதில்லை! மாய அன்பை நாடும் நமது கேடான ஆத்துமா தேவனை விட்டு விலகப் பார்ப்பதுதான் துரதிருஷ்டம்.**

*நாம் அவரை விட்டு விலகுவதும் ஒன்றுதான்...... அழிவதும் ஒன்றுதான்! அவரை விட்டு விலகுவது காரிருள் பிரவேசமாயும்! 'தெய்வ அன்பை' இழந்த குளிர்ச்சியாயும்! இருக்கும்.*

*- மேடம் குயான்*

---

## 'அன்பின் ஒளியே' கிறிஸ்தவ ஜீவியம்! ஊழியம்!

*பூமியிலிருந்து பரலோகம் எவ்வளவு தூரம்? என, சிலர் என்னிடம் கேள்வி கேட்டதுண்டு. அவர்கள் பகடியாய் கேட்டார்களா? நிஜமாய் கேட்டார்களா? என்பதை அறியேன். ஆனால், நான் அவர்களுக்கு கூறிய பதிலை உங்கள் யாவருக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேளுங்கள்: "நீங்கள் எண்ணிக் கொண்டபடி பரலோகம் வெகு தூரத்தில் இல்லை! வேத ஆதாரத்தின்படி, நான் உங்களை திருப்பிக் கேட்கிறேன். தானியேலுக்கு பரலோகம் தூரமாய் இருந்ததா? எலியாவின் ஜெபத்திற்கு பரலோகம் தூரமாய் இருந்ததா?" அன்று கர்மேல் மலையில் கூடியிருந்த புறஜாதியார் கூப்பிட்ட ஜெபத்திற்கு பரலோகம் தூரமாயிருந்தது, உண்மைதான்! ஆனால், எலியாவின் ஜெபத்திற்கு பரலோகம் மிக அருகாமையில் இருந்தபடியால் 'உடனே'*

*வானத்திலிருந்து அக்கினி இறங்கியது. இன்றும்,* **"ஆவியில் நிறைந்து வாழும் மனிதர்கள்"** *பூமியிலிருந்தவாறே பரலோகத்தை உற்று நோக்க அவர்களால் முடிகிறது! தானியேலின் தேவன் அவர்களின் தேவனாய் இருக்கிறபடியால், தங்கள் ஜெபத்திற்கு உண்டு! அல்லது, இல்லை! என்ற பதிலை உடனே பெற்றுக்கொள்கிறார்கள்.*

*உன்னதத்தை நோக்கிப் பார்ப்பவர்களுக்கு கிடைத்திடும் உடனடி பலன் 'தெய்வ அன்பு' என்பதை மறவாதிருங்கள். நீங்கள் ஒரு ஆவிக்குரிய சபையில் இருந்துகொண்டு, கர்த்தருடைய சபையின் ஊழியங்களை தெய்வ அன்பினால் நிறையாமல் பணியாற்றினால், அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை!*

> **ஒரு மருத்துவரோ அல்லது வழக்கறிஞரோ 'அன்பில்லாமல்' தங்களுடைய பணியை நேர்த்தியாய் செய்திட முடியும். ஆனால், சபை ஊழியம் தொடங்கி, தேவனுடைய வேறு எந்த ஊழியங்களை நீங்கள் செய்ய வேண்டுமென்றால் 'தெய்வ அன்பு இல்லாமல்' செய்திட முயற்சிப்பது பெருத்த தோல்வியேயாகும்!**

*நீங்கள் இரட்சிக்கப்பட்டவராயிருந்தால், அவர் தந்த இனிமையான வேதத்திற்கு உங்களை 'மாணாக்கனாய்' இணைத்திருப்பீர்கள். வேத பிரியனாய் இல்லாத எந்தவொரு மனுஷனும் கனி கொடுத்து வாழ இயலாது!* **கனி உள்ள ஜீவியம், ஒளி தரும் ஜீவியமாகும்!** *அவ்வாறு ஒளி தரும் ஜீவியத்தை நீங்கள் பெற்றிருந்தால், 'ஒளி எவ்வாறு பிறந்தது என்று?' நீங்கள் யாருக்கும் சொல்ல வேண்டிய அவசியமில்லையே. ஓர் கலங்கரை ஒளி விளக்கு, ஒளி கொடுத்துக் கொண்டேயிருக்கும். அது அல்லாமல், தங்கள் ஒளியை காணும்படி 'பீரங்கி முழக்கம்' செய்வதில்லை. மங்காத ஒளியாய் தொடர்ந்து ஒளி வீசிக்கொண்டேயிருக்கும்!*

> **இன்றைய கிறிஸ்தவ உலகத்தில், எண்ணற்ற ஜனங்கள், கர்த்தருக்கென்று 'பெரிய காரியங்களை' செய்திடவே விரும்புகிறார்கள். ஆனால், வெகு குறைவானவர்கள் மாத்திரமே, தங்கள் கைகளுக்கு அருகாமையில் வாய்த்த சின்னச் சின்ன ஊழியங்களை மகிழ்வுடன் செய்கிறார்கள். இவர்களே தாழ்மையுள்ளவர்கள்! ஒளி சிந்தும் மக்கள்!**

*நீங்கள் எண்ணுகிறபடி சபையில் 'குறைவான எண்ணிக்கை' யாதொரு பாதிப்பையும் தேவனுக்குத் தருவதில்லை. ஆனால் அந்த குறைவான எண்ணிக்கை கொண்ட மக்களின் உள்ளத்தில் 'தேவன் வாசம் செய்தால்' குறைவானது என தேவனுக்கு எதுவும் இல்லை! ஆகவே ஒளி உங்கள் உள்ளத்தில் தங்குவதாக. ஓர் ஒளி சிந்தும் தெய்வ குணாதிசயத்தோடு வாழ்ந்திடவே நீங்கள் எப்போதும் பிரயாசப்படுங்கள். இப்படியிருந்தால், அந்த ஜீவியத்தின் மேலான*

கௌரவம் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்.

ஜீவன் நிறைந்த வேதப்புத்தகம் 'பரிசுத்த ஆவியால் நிறைந்த' புத்தகமாய் உங்களுக்கு இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், ஒளி கதிர் வீச்சு இல்லாத நிலா போலவே, உங்களுக்கு இருக்கும். அதுஏனென்றால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் உபதேசமாகவே பற்றியிருக்கிறீர்கள். உங்களுக்கு ஒளியாய் வந்த அவரை, நீங்கள் நல்ல நண்பராய் மாற்றிக்கொள்ளவில்லை! அவ்வளவுதான். உங்கள் இருதயத்தில் உள்ள சுய நலத்தையும், சுய நோக்கத்தையும், சுய விருப்ப சித்தத்தையும்.... இவ்வாறு, தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமான எல்லாவற்றையும் களைந்து, வெறுமையாக்கிவிட்டால், உங்கள் இருதயத்தின் ஒவ்வொரு பகுதியையும் பரிசுத்த ஆவியானவர் ஆண்டுகொள்வார். இதற்கு மாறாக, கொஞ்சம் பெருமையோ, கொஞ்சம் சுய நல நோக்கமோ, உங்கள் இருதயத்தில் இருந்தால், 'ஆவியான தேவன்' உங்கள் இருதயத்தில் வாசம் செய்திட தனக்கு இடம் இல்லை எனக்கூறி விலகிச் சென்றுவிடுவார்.

**"தேவனே என் உள்ளத்தை நிறைத்தருளும்" என அநேக மாந்தர்கள் ஜெபிப்பதை கேட்டிருக்கிறேன். ஆனால், அவர்களின் இருதயமோ வேறு பல காரியங்களாலும், உலக கவலையாலும் நிறைந்திருக்கிறது.**

இவ்வாறு ஜெபிப்பதற்கு பதிலாக, "தேவனே என் உள்ளத்தில் உள்ள தீதான உலகத்தையும், அதன் பெருமையையும் என்னை விட்டு அகற்றி வெறுமையாக்கும்" என ஜெபிப்பதே மேலானது. ஒன்றை வெறுமையாக்காமல், 'நிரப்பப்படுவது' கூடாத காரியம்! உங்கள் இருதய பாத்திரத்திலுள்ள தேவனுக்கு விரோதமான யாவும் கொட்டப்படட்டும்! அப்போது, பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பி, ஒளி சிந்தும் ஆளுகைக்குள் நடத்துவார்!

- D.L.மூடி பிரசங்கியார்

---

## இரட்சகரில்லாமல், நாமாக பாவத்தை ஜெயித்திட முடியாது!

**பா**வமற்ற ஜீவியம், நமது புத்திக்கு விளங்கவில்லை. அப்படிப்பட்ட அனுபவம் நமக்கில்லை! ஆகிலும் பரிசுத்தத்தை விரும்புகிறோம். பரிசுத்தம் அவருக்குள் இருந்தது. மனுக்குலத்தாருக்குள் தோன்றின மாசற்ற புருஷன் இயேசு ஒருவரே! பாவத்தைப்பற்றிய அற்ப உணர்ச்சி அவருக்குள்ளிருந்திருக்குமானால், அது அவர் முகத்தில் தோன்றியிருக்காதா? இரவு பகல் கூடவேயிருந்த அவரது சீஷர்கள் அவ்வாறு ஏதாவது குறிப்பை அவரில் கண்டதுண்டா? அப்படிக் கண்டிருந்தால் மாசற்ற, குற்றமற்ற, பாவமற்ற, பரிசுத்தர் என்னும்

*பதங்களால் அவரை அழைக்கத் துணிவார்களா? பூர்வந்தொடங்கி தேவபக்தர்களில் யாரையாகிலும் அவர்கள் அப்படி அழைத்ததுண்டா?* **பாவமற்றவர் மாத்திரமே பிறர் பாவங்களை மன்னிக்க முடியும்!** *அவரே பாவியாயிருந்தால், பாவிகளுக்கு அவரால் இரட்சிப்புண்டாவது எப்படி? அவரில் பாவமுண்டானால் மரணமே அவருக்கு முடிவாகும்! அப்படியானால், அவர் மரணத்தை ஜெயிப்பதெப்படி? பரிசுத்தர் மாத்திரமே அழிவை காணாதிருக்க முடியும்! அவர் சிந்தின இரத்தம் நமது பாவங்களைப் போக்க வேண்டுமானால், அது பரிசுத்த இரத்தமாயிருக்க வேண்டும். அவரில் பாவமிருந்தால், அவரது ரத்தம் பரிசுத்தமாயிருப்பதெப்படி? ஆகையால், அவர் நம்மைப்போல் மனுஷனாயிருந்தும், பாவம் என்ற ஒரு விஷயத்தில் மனுமக்களுக்கு அவர் முற்றிலும் பிரிந்தவரானார்!*

**அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமற்றவராயிருந்த இரகசியம், அவருக்கும் பிதாவுக்குமுள்ள பூரண ஐக்கியமே!**

*இந்த ஐக்கியத்தில் மனுக்குலமனைத்துக்கும் அவர் வேறு பிரிந்தவராயிருக்கிறார். அவர் ஒருவர் தவிர, உலகில் வேறொருவனுக்கும், பிதாவோடு அவருக்கிருந்த பூரண ஐக்கியமும் சம்பந்தமும் இருக்கவில்லை. ஆகையால் நினைவு, வார்த்தை, செய்கையில், அவரைப்போன்ற பரிசுத்தவான் எவனுமில்லை! நான் பாவமற்ற புருஷன் என்று ஒருவன் சொல்வானானால், அதைப்போல் பயங்கரமான பொய் வேறொன்றில்லை. இந்த பூமியில், நானும் அவரைப்போல் பாவமற்ற பரிசுத்தனாகக்கூடுமென்று ஒருவன் சொல்வானானால் அதைப்போல் துணிகரமும் வேறொன்றில்லை. இந்த இரண்டாயிரம் வருஷகாலமாகியும் அவரைப் போல் ஒருவனும் தோன்றினதுதில்லையே! அவர் மூலமாய் நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். அவர் இரத்தத்தால் நமது அசுத்தங்கள் கழுவப்பட வேண்டும். அவர் ஆவியால் நாம் உள்ளான மனுஷனில் நாளுக்குநாள் மறுரூபமடைய வேண்டும்.* **அவரோடுள்ள ஐக்கியத்தால் மாத்திரமே நாம் பாவத்துக்குத் தப்பி பரிசுத்த ஜீவியத்தில் வளர முடியும்!**

*கிறிஸ்துவுக்குள் எவ்வளவோ உன்னத வளர்ச்சி அடைந்த பவுலும், பாவிகளில் தான் பிரதான பாவியென்று அந்திய காலத்தில் அறிக்கையிட்டார். இதனாலே, அவர் கடைசிவரை பிரதான பாவங்களைச் செய்தாரென்பது அர்த்தமல்ல. எவ்வளவுக்கு அவர் கிறிஸ்துவை நெருங்கி ஜீவித்தாரோ, எவ்வளவுக்கு எஜமானை மாதிரியாக நோக்கினாரோ, அவ்வளவுக்கு அந்த உத்தம அப்போஸ்தலன் தன் சுபாவக் கேட்டைக் கண்டு புலம்பினார்! பாவமற்ற ஜீவியத்துக்காக*

*வாஞ்சித்து, சரீரமீட்பு சீக்கிரம் வரும்படி தவித்தார்!*

**நாம் தொடர்ச்சியாய் கிறிஸ்துவின் கிருபையால் எவ்வளவு பக்தியில் தேறினாலும், மாம்சத்தில் குடியிருக்குமளவும் பாவத்துக்கு நாம் முற்றிலும் தப்பினவர்களல்ல!**

*சிலர் ஆவிக்குரிய உற்சாகத்தில், அல்லது சிலகாலம் தேவபக்தியாய் நடக்கும்போது, தாங்கள் பாவமற்றவர்களென்று நினைக்கத் துணிவார்கள். நாட்கள் சென்றபின், தாங்கள் அப்படி நினைத்ததற்காகத் துக்கப்படுவார்கள். நாம் கர்த்தரைப் பின் செல்லும்போது, பழைய சோதனைகள் ஒழிந்தால் புதியவைகள் தோன்றும். இவைகளையும் மேற்கொண்டு சென்றால், இன்னும் எதிர்பாராத தீமைகள் தோன்றும்.* **கடைசி வரை நமக்குப் போராட்டம் உண்டு.** *நாம் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு வருவதற்கு அதுவே ஏற்றது. ஆகையால் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறிவிட்டோம் என்று நாம் சொல்வதற்கு ஏதுவில்லை!*

**கிறிஸ்து ஒருவரே பாவமற்ற பரிசுத்தர். பாவமற்றிருப்பதே பரிசுத்தமல்ல. பாவமற்றிருப்பது ஒரு பக்கம்; பரிசுத்தம் மறுபக்கம்!** *நோயற்றிருப்பது ஒரு காரியம்; ஆரோக்கியமாயிருப்பது மறுகாரியம்! நோயற்றவனும், ஆரோக்கியவானுமே பூரண புருஷன்! பாவமற்றவனும் பரிசுத்தனுமே ஆத்துமாவில் பூரண புருஷன்! ஆதாம் செம்மையானவனாக உண்டாக்கப்பட்டான். அவனில் பாவமில்லாதிருந்தும், தவறிப்போகக்கூடிய குழந்தையைப்போலிருந்தான். அவன் குற்றமற்றவனாயிருந்தபோதிலும், பரிசுத்த முயற்சியில் தேறினவனல்ல! ஆட்டிவைத்த பொம்மைபோலிருந்தான். அது அந்தப் பக்கம் சாயுமோ, இந்த பக்கம் சாயுமோ தெரியாது. "தீமை செய்தலை விட்டோயுங்கள், நன்மை செய்யப் படியுங்கள்" (1கொரி.15:34) என்ற தேவவாக்கைப் போல், பரிசுத்த ஜீவியமானது, தீமையான யாவற்றிற்கும் விலகினதும், நன்மையான யாவற்றிலும் முயற்சியுள்ளதுமாயிருக்கிறது! நமது இரட்சகர் ஜீவியம் அப்படிப்பட்டது.*

***அவர் தீங்கு செய்யாத சாதுவாக மாத்திரம் வெளிப்பட்டவரல்ல. நன்மை சொரூபியாகவும் வெளிப்பட்டார்!***

*அவர் பாவமற்றவரும் பரிசுத்த செயல்களை நிறைவேற்றுகிற வருமாயிருந்தார். தம்மை மனுஷகுமாரன் என்று சொல்லி மனுமக்க ளோடு தம்மை ஒன்றாக்கினார். மனுப்புத்திரரில் ஒரு மனுப்புத்திரனாக, சகோதரரில் ஒரு சகோதரனாக, சிநேகதரில் ஒரு சிநேகிதனாக, நமது மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமாகி, எல்லாவிதத்திலும் தமது சகோதரருக்குச் சொந்தமானவராகவே வந்தார்!*

*ஆ, அவர் நம்மீது கொண்டிருந்த ஐக்கிய அதிசயத்தைக் கவனியுங்கள்! நம்மைத் தொடாதபடித் தம்மை அவர் தூரப்படுத்திக்கொள்ளவில்லை. அப்படியிருந்தும், அவரது ஜீவியத்தை வாசிக்கும்போது எவரோடும் ஒப்பிடக்கூடாத மாசற்ற பரிசுத்தராகக் காண்கிறோம். நமக்கு நேர்ந்திடும் எப்படிப்பட்ட சோதனைகளும் அவரை மேற்கொள்ளவில்லை! எவ்வளவு கபடான கேள்விகளும் அவரை மயங்கிடச் செய்யவில்லை. எவ்வித ஆபத்துக்கும் அவர் அஞ்சவில்லை.* **எப்பேர்பட்ட பகைக்கும் அவர் பயப்படவில்லை.** *எவ்வித கோபமூட்டுதலிலும் அவர் பதட்டப்படவில்லை! அவரது அன்பை, பொறுமையை, நம்பிக்கையை, ஊழியத்தைப் பறக்கடிக்கத்தக்க அநேக காரியங்கள் அவருக்குச் சம்பவித்தன! சுய ஜனங்களும், அதிகாரிகளும், சீஷர்களுங்கூட அவருக்கு பெருஞ்சோதனையாயிருந்தார்கள்.* **சகலத்தையும் சகித்தார். சகலத்தையும் மேற்கொண்டார்.** *தமக்கு நேரிட்ட பலத்த போராட்டங்களில் மகா சாந்தமும் அமைதலுமாய் நடந்துகொண்டார். கொஞ்சமாகிலும் திகைப்பாவது, பதட்டமாவது, ஆத்திரமாவது அவரிடத்தில் காணப்படவேயில்லை!*

**சகல கேடுகளின் மத்தியில் வசித்த அவர் கொஞ்சமேனும் கறைப்படவில்லை. தாம் கறைப்படாதது மாத்திரமல்ல! கறை நிறைந்த பாவிகளை கைதூக்கி இரட்சிக்கும் வீரனாகவும் விளங்கினார்!**

*வியாதிக்காரர் நடுவில் உலாவும் வைத்தியனைப்போலவும், ஆடுகளை நடத்தும் மேய்ப்பன் போலவும், கைதிகள் முன் வீற்றிருக்கும் நியாயாதிபதிபோலவும் விளங்கினார்! பாவிகளுக்காக பரிதபித்தார். பாவத்தின் கேட்டால், மனுப்புத்திரர் வேதனைப்பட்டுத் தவிப்பது அவருடைய திருமனதுக்கு ஆறாத்துயரமாயிருந்தது! அவருக்குள் பாவமிருந்திருக்குமானால் மற்ற பாவிகளுக்காக அவர் பரிதபிப்பதேது? அவர் புத்தரைப்போல அல்ல... இரட்சிக்கவும், தேவ ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கவும், அதை நிறைவேற்றும் படி பிதா ஏற்படுத்தின வழியில் முழுமனதாய் சென்றார்! ஊழிய ஆரம்பத்தில் அவர் வனாந்தரத்துக்கு சென்றார். சாத்தான் தீமையான வழிகளை அவருக்குக் காண்பித்தபோது, அச்சோதனைகளை மேற்கொண்டு தீர்க்கமாய் தமது ஊழியத்தில் பிரவேசித்தார்! அவரது நிகரற்ற ஜீவியத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல், நாமாகவே பிரயாசப்பட்டால் அவரைப்போல ஆகலாம் என்பது* **தற்காலக் கொள்கைக்காரரின் உபதேசம்!** *ஆம், அவரின்றி இரட்சிப்பு இல்லை! அப்போது மாத்திரமே, சுய மகிமையை நாம் தேடாமல், நம் இரட்சகர் ஒருவருக்கே மகிமை சேர்ந்திட முடியும்!*

*- பரமானந்தம் ஐயர்*

## தேவனை சார்ந்து கொள்ளும் மகிழ்ச்சியே, மகிழ்ச்சி!

**ம**னந்திரும்புதலோடும் விசுவாசத்தோடும் நாம் கிறிஸ்துவண்டையில் திரும்பினால், அவர் தமது பரலோக ஐசுவரியங்களை 'நிச்சயமாய்' தருவார்! ஆகிலும், இதைக் காட்டிலும் இன்னும் ஒரு படி மேலாய் "நம் ஆவியின் ஏழ்மையை" உணர்ந்தவர்களாய் அவரிடம் வர வேண்டும். அதாவது, திவாலாகிப் போன ஒரு வங்கிக்கு ஒப்பாக, நமது ஆவிக்குரிய ஏழ்மையை உணர்ந்து, தேவனை முற்றிலுமாய் சார்ந்து கொள்ள வேண்டும்! நாம் பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் 'சிறு பிள்ளையாய்' மாற வேண்டும் என இயேசு கூறினார். இந்த சிறுபிள்ளைகள், பெற்றோரை சார்ந்தே வாழ்கிறார்கள்! தாங்கள் போஷிக்கப்படுவதும், பாதுகாக்கப்படுவதும், பெற்றோர்களை சார்ந்து கொள்ளும் உறவில் இருக்கிறது என்பதை இந்த பிள்ளைகள் அறிவார்கள்!

**இவ்வாறு 'சார்ந்து வாழ்வதை வைத்து' அவர்களை 'ஏழை' என்று சொல்லி விட கூடாது! மாறாக, பெற்றோர்களை சார்ந்துகொள்ளும் உறவு அற்றுப்போயிருந்தால், அதுவே அவர்களை 'நாதியற்ற ஏழையாய்' மாற்றிவிடும்!**

நாம் கிறிஸ்துவிடத்தில் மனம் திரும்பி வரும்போது, ஓர் ஆச்சரியமான நிகழ்வு ஏற்படுகிறது.... ஆம், நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறி தேவனுடைய குடும்பத்தில் அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாய் உரிமை பெறுகிறோம். தன் பெற்றோரை சார்ந்து வாழும் பிள்ளைகள் தங்கள் உணவைக் குறித்தோ, உடையை குறித்தோ, உறைவிடத்தைக் குறித்தோ கொஞ்சமும் கவலைப்பட மாட்டார்கள்! தாங்கள் சார்ந்துள்ள பெற்றோர்கள், தங்களுக்குத் தேவையான அனைத்தையும் தருவார்கள்! என்ற மனதிடம் அவர்களிடம் இருக்கும். இதை இயேசு குறிப்பிடும்போது, "என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் போன்ற **கவலையின் சிந்தை இல்லாதிருங்கள்** (Take No thought)..... மேலும், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" என கூறினார் (மத்.6:31,33). தேவன் நம்முடைய சுக நலன்களைக் குறித்த முழு பொறுப்பும் எடுத்துக்கொண்டபடியால் "நம் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடும்படி" புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம் (1பேதுரு 5:7).

தேவனை இவ்வாறு சாாந்து கொண்ட நமக்கு, "நம்முடைய

*இருதயம் கலங்கத் தேவையில்லை" எனவும் இயேசு கூறினார் (யோவான் 14:1). தேவனே உங்களைப் பார்த்து உங்கள் பாரத்தை நான் சுமந்து கொள்வேன்! இனி அதைக் குறித்து ஒன்றும் சிந்திக்காதீர்கள்! உங்கள் பாரங்களை முற்றிலும், என்னிடத்தில் தள்ளி விடுங்கள்! இவ்வாறெல்லாம், தேவன் நம்மோடு பேசியதை அடிக்கடி நினைவு கூர்வோமாக!*

**சார்ந்து வாழும் பிள்ளைகள், எதையும் கேட்க முடியாத பின் தங்கிய பிள்ளைகள் அல்ல! தங்கள் தேவைகளை தைரியமாய் கேட்க முடியாத பிள்ளைகளே, தெளிந்த மனநிலை கொண்டவர்களாய் இருப்பதில்லை!**

*தன்னை ஆதரவாய் சார்ந்து கொண்ட பிள்ளைகளைப் பார்த்தே கிருபாசனத்தண்டைக்கு தைரியமாய் வாருங்கள்! ஏற்ற சமயத்தில் உதவி செய்யும் இரக்கத்தைப் பெற்று கிருபையை கண்டடையுங்கள்! என இயேசு கூறினார் (எபி.4:16).*

*நம்முடைய ஜீவிய தேவைகள் எல்லாவற்றிற்கும் தேவனையே சார்ந்திருக்கிறோம் என்பதை தேவன் நன்றாகவே அறிந்திருக்கிறார். அவ்வாறு அறிந்திருப்பதினிமித்தமே, இயேசு நம்மைப் பார்த்து: கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்! தேடுங்கள் கண்டடைவீர்கள்! தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்! என்றெல்லாம் திரும்பத் திரும்ப கூறியிருக்கிறார் (மத்.7:7).*

*இன்று உங்களுக்கு இருக்கும் சஞ்சலமென்ன? ஏதோ ஒரு பிரச்சனை உங்கள் இருதயத்தை பாரப்படுத்தி, உங்கள் தலைமேல் ஏறி ஆட்கொள்வதைப்போல் அச்சுறுத்துகிறதா? ஏதோ ஒரு கவலை அல்லது ஒரு பிரச்சனை, என்ன நடக்குமோ என்ற பயத்தை உண்டாக்குகிறதா? இங்குதான் நீங்கள் விழிப்பாய் இருக்க வேண்டும்:*

**தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும் நீங்கள், கிறிஸ்துவின் மீது வைத்திருக்கும் விசுவாசத்தின் மூலமாய், இந்த பிரச்சனைகள் யாவற்றையும் தேவனுக்கு முன்பாக திருப்பி வைத்துவிடுங்கள்! இதுவே, தேவன் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதையும்! உங்களுக்கு உதவி செய்ய வல்லவர் என்பதையும்! நீங்கள் நிரூபிக்கும் செயலாயிருக்கிறது.**

*உங்களுக்கு உதவி செய்யும் ஆண்டவர், அந்தப் பிரச்சனைகளை உங்களைவிட்டு அகற்றுவார்! அல்லது சில சமயங்களில் அந்த பிரச்சனையை தாங்கிக் கொள்ளக்கூடிய விசுவாச பெலனையும் தருவார்! எப்படியிருந்தாலும், நீங்கள்* **அவரிடத்தில் இளைப்பாறி** *இருப்பீர்கள்..... தேவனுடைய பிள்ளைகள் மகிழ்ச்சியாய்*

இருப்பதற்குரிய பங்கை பிலிப்பியர் 4:6,7 வசனங்கள் தெரிவிக்கின்றன: நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்! எல்லா விண்ணப்பங்களையும் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தின் மூலமாய் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்! அப்போது, உங்கள் **புத்திக் கெட்டாத தேவ சமாதானம்** உங்கள் இருதயத்தையும், உங்கள் மனதையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்! என்ற ஆச்சரியமான பாதுகாப்பை தேவன் வழங்கியுள்ளார்!

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால்: ஒவ்வொரு நாள் ஜெபத்திலும் தேவனிடத்தில் நெருங்கி வரும் இரகசியத்தை கற்றுக்கொண்ட மனுஷன், நிச்சயமாகவே மகிழ்ச்சி நிறைந்தவனாயிருப்பான்!

**உங்கள் யாவரையும் பார்த்து நான் கூற விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு நாள் காலையிலும் 15 - நிமிட நேரமாவது 'தேவனோடு தனிமையில் இருக்க' பழகுங்கள். அதுவும், உங்கள் வேலை எதுவாயிருந்தாலும், அதை துவங்குவதற்கு முன்பாகச் செய்யுங்கள்!**

ஜெபத்தைவிட்டு நீங்கள் எழுந்திருக்கும்போது உன்னத பெலன் உங்களைத் தாங்குவதை காண்பீர்கள். உண்மைதான், நிறைவான மகிழ்ச்சியும் அளவில்லாத அவரது நன்மைகளும் **பரலோக பொக்கிஷத்திலிருந்து** நாம் தொடர்ச்சியாய் பெறுவது, நாம் தேவனோடு கொண்ட உறவை சார்ந்ததேயாகும்! நாம் தேவனுடைய பிள்ளை என கூறுவதற்குரிய ஒரே நிபந்தனை, நாம் ஆண்டவரை முழுமையாக சார்ந்து கொள்வதில் மாத்திரமே இருக்கிறது!

அது எப்படியெனில், தன்னுடைய இயலாமையை அல்லது தன் ஏழ்மையை அறிந்து கொண்டவன் மாத்திரமே ஐசுவரியவானாய் மாறிட முடியும்! **'தான் கைவிடப்பட்டவன்' என்ற நிர்ப்பந்த நிலையை அறிந்தவன் மாத்திரமே 'தேவனுடைய – சுவிகார தத்துபிள்ளையாய்' மாறிட முடியும்.** பரலோகத்திற்கோ அல்லது சந்தோஷத்திற்கோ உள்ள வழியை நாமாக ஏற்படுத்திக்கொள்ள முடியாது! நம்முடைய பக்தி வாழ்க்கை நாமாக அமைத்துக்கொள்ள முடியாது!

எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், நம்முடைய ஜீவிய பாதையை நாமாக புதுப்பித்துக்கொள்ள முடியாது! நிறைவான சந்தோஷமும், தேவ பக்திக்குரிய யாதொரு இரட்சிப்பும், கிறிஸ்து இயேசுவின் மூலமாய் மாத்திரமே பெற முடியும். 'நமது இயலாமையில்' கர்த்தரிடம் தாழ பணியக்கடவோம்.... அப்போது அவர், பரலோகத்தின் ஆசீர்வாத பலகணிகளை நமக்காக நிச்சயம் திறப்பார்!

- பில்லி கிரஹாம் USA

## பரலோக ராஜ்ஜியத்தில் 'உங்கள் வேர்' செழிக்கட்டும்!

*இந்த மண்ணில் வேர்விட்டு செழித்திட, நல்ல நீர்வளம் வேண்டும்! இதுவே மண்ணுலகின் நியதி! ஆனால்,* **விண்ணக வாழ்வின் நியதியோ** *இதற்கு முற்றிலும் வேறுபட்ட நியதி! இம்மண்ணுலக ஜீவியத்தின் வறண்ட நேரமே.... பரத்திற்குரிய* **வேர்விடும் நேரம்!** *தங்கள் கிறிஸ்தவத்தை, புறஜாதி மக்களைப்போல் "பூமிக்குரிய செழிப்பில்" மனதுவைத்தவர்களுக்கு "விண்ணுக்குரிய செழிப்பின்" வழி எக்காலத்தும் தெரியப்போவதில்லை! எனவேதான், இந்த மண்ணுக்குரிய 'யாதொரு சிறிய வறட்சி' சம்பவித்தாலும், துவண்டு வாடிப்போகிறார்கள் (மத்.13:6). ஆனால், விண்மக்கள் அப்படி அல்ல!*

**'வறண்ட நேரமே' பரத்தின் வேர்விடும் நேரம் என அறிந்து, மிகுந்த விழிப்புடன் ஜீவித்து பரன் நோக்கி பசுமையாய் துளிர்விட்டு வளர்வார்கள்!**


*பொருளாதார நெருக்கடியும், தரித்திரமும் யாதொரு மனிதனையும் வறட்சிக்கும், மனமடிவுக்கும் உந்தித் தள்ளுகிறது! ஆனால், பரத்தின் நியதியை கண்டவனோ "தன் தரித்திரத்தில் வேர்விட்டு விசுவாசத்தில் ஐசுவரியவனாய் மாறுகிறான்" என யாக்கோபு 2:5 கூறுவதைப் பாருங்கள்! "ஆகாயத்து பட்சிகளைப் பிழைப்பூட்டும் தன் பரம தகப்பனை" இவர்களே நடைமுறையில் அனுபவிக்கிறார்கள்! (மத்.6:26). "போதுமென்ற மனதோடு கூடிய தேவ பக்தியின் மிகுந்த ஆதாயத்தை" இவர்களே சுதந்தரிக்கிறவர்கள்! (1தீமோ.6:6). ஆம், இவர்களுக்கே "குறைவான" திராட்சரசம் பிரமிப்பூட்டும் ருசியான ரசமாய் மாறும் விந்தையும்... 'குறைவான' அப்பமும் மீனும் எல்லோரும் சாப்பிட்டு திருப்தியாகும் அற்புதமும் இன்னதென்று அறிவார்கள்!*

*இப்பூமியில் நம்போலவே பாடுகள் அனுபவித்து, வாழ்ந்த நம்* **சிலுவைநாதனின் "வறண்ட நிலம்"** *உங்களுக்குத் தெரியுமல்லவா? (ஏசா.53:2).... அழகில்லாதவர்! அசட்டை செய்யப்பட்டவர்! புறக்கணிக்கப்பட்டவர்! கொஞ்சமல்ல, துக்கத்தால் நிறைந்தவர்! "தேவன்தான் இவரைத் தண்டித்து சிறுமைப்படுத்துகிறார்" என பிறரால் எண்ணப்பட்டவர்! நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்! நியாயம் பறிக்கப்பட்டவர்!..... அவரது 'வறண்ட நிலம்' நம் வறண்ட நிலத்திற்கு ஒப்பிடும்போது "இது லேசான உபத்திரவம்" என உங்களுக்குத் தோன்றவில்லையா? அத்தனை வறண்ட தன் வாழ்வின் நிலத்தில்,* **கெம்பீரமாய் வேர்விட்டு,** *பச்சை பசேலென இளங்கிளையாய் துளிர்த்து வளர்ந்து.... தன்* **ஆத்தும வருத்தத்தின் பலனைக்** *கண்டு பூரண திருப்தி அடைந்த நம் பிராண நாதன் அடிச்சுவடு நடப்போமாக!*

*- T.ரத்தினகுமார்*

## துன்பத்தில் வாழ்ந்து, ஊழியம் செய்த

# வில்லியம் கேரி !



தன்னுடன் செருப்புக்கடையில் வேலை செய்த தனது சக தோழன் ஒருவன் மூலமாக வில்லியம் கேரி பாவ உணர்வடைந்து தேவனுடைய இரட்சிப்பை தன் 17-ம் வயதில் கண்டடைந்தார். தனது செருப்பு தைக்கும் தொழிற்கூடத்திலேயே ஒரு பூமி உருண்டையை தோலினால் செய்து அதில் உலகப்படத்தை வரைந்தார். அந்த பூமி உருண்டையை பார்க்கும்போதெல்லாம் தேவனது சுவிசேஷம் எட்டாமல் பாவ இருளிலே மூழ்கி கிடக்கும் கோடானு கோடி மாந்தரைக் குறித்த ஆத்தும பாரம் அவருக்குள் பற்றி எரியத் தொடங்கியது!

அவரது மண வாழ்க்கை அவரது மனதுக்கு உகந்ததாக இருக்கவில்லை. அந்த அம்மையாருக்கு மனநிலை பாதிப்பு இருந்தமையால் வில்லியம் கேரியின் மாபெரும் தேவ பணிகளைக் குறித்து கொஞ்சம் கூட அந்த அம்மையாருக்கு அக்கறை இல்லாதிருந்தது. ஆனால் கேரி அதைக் குறித்து கவலை கொள்ளாமல் பெலவீனமான தனது மனைவியை மிகுந்த பேரன்புடன் அரவணைத்து கொண்டு சென்றார். திரளாய் கூடிய குருவானவர்களின் கூட்டத்தில் கேரியின் மிஷனெரி பாரம் அங்கீகரிக்கப்பட்டது! **“தேவனுக்காக பெரிய காரியங்களை முயற்சி செய்! தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர் நோக்கு!!”** என்ற மகத்தான விசுவாச வாக்கை அன்று கூறினார். அந்த கூட்டத்தில் அவர் கொளுத்திவிட்ட ‘மிஷனெரி அக்கினியின்’ பயனாக ஒரு மிஷனெரி இயக்கம் தோன்றியது!

5-மாத கடற்பயண யாத்திரைக்குப் பின்னர் வில்லியம் கேரியின் குடும்பம், இந்திய நாட்டின் வங்காள மாநிலத்தில் 1793-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதி கரையிறங்கினர். சேறும் சகதியும் நிறைந்த காட்டுப்பகுதி ஒன்றுதான் வில்லியம் கேரி குடும்பத்தினருக்கு வங்காளத்தில் தங்கி தாபரிக்க கிடைத்தது. முட்னாபாட்டி என்ற ஊரைச் சுற்றியிருந்த 200 வங்காள கிராமங்களுக்குச் சென்று கேரி வங்காள மொழியில் தேவனுடைய சுவிசேஷத்தை மக்களுக்கு அளித்தார். 1807-ம் ஆண்டு அவரது மனைவியின் பைத்திய நிலை மிகவும் தீவிரமாகி, அவர்கள் மரித்துப் போனார்கள். கடுமையான பைத்தியம் பிடித்த தனது மனைவியோடு அவர் பட்ட பாடுகளை, அவரும் அவரை ஆட்கொண்ட கர்த்தரும் தான் அறிவார்கள். நதிகளை தெய்வங்களாக கருதி அவைகளில் குழந்தைகளை வீசிக் கொல்லும் கொடிய பழக்கத்தை மாற்ற, கேரி எடுத்த பிரயாசங்கள் கொஞ்சமல்ல! அதேபோன்று, கணவன் இறந்த பின்னர், உயிரோடிருக்கும் மனைவியை கட்டாயப்படுத்தி, கணவனுடன் சுடுகாட்டில் வைத்து எரித்துக் கொல்லும் “சதி” பழக்கத்தை ஒழித்துக்கட்ட கேரி ஊக்கமாக ஜெபித்து பெரும் முயற்சிகள் எடுத்து வெற்றி கண்டார்!

அவருடைய ஜீவ காலத்திலேயே வங்காளி, சமஸ்கிருதம், ஹிந்தி, ஒரியா, மராட்டி ஆகிய மொழிகளில் முழு வேதாகமமும் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டும் வெளிவந்து விட்டது.

1834-ம் ஆண்டு தன் 73-ம் வயதில் வில்லியம்கேரி தனது பரம எஜமானரின் இளைப்பாறுதலில் பிரவேசித்தார். செராம்பூர் கிறிஸ்தவ கல்லறை தோட்டத்தில் “நிர்ப்பந்தனும், ஏழையும், நாதியற்ற புழுவாகிய நான், நேசரே, உமது கரங்களில் வீழ்கின்றேன்!” என்ற எளிய கல்லறை வாசகத்தை தாங்கி, ஒரு மூலையில் உள்ளது!

*- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

## தேவனுடைய இரட்சிப்பின் கிரியை துரிதப்படும் காலம் இது!

சமீபத்தில், தேவ ஊழியத்தின் பாதையில் இமாச்சல் பிரதேசத்தில் உள்ள மணாலி என்ற இடத்திற்கு சுவிசேஷ கூட்டம் நடத்த சென்றிருந்தோம். மணாலியிலுள்ள மிஷன் ஆஸ்பத்திரியில் உள்ள ஒரு சிறிய ஹாலில் அந்த கூட்டம் நடைபெற்றது. எதிர்ப்பு பல இருந்தாலும், நாங்கள் ஆச்சரியப்படும் வகையில் திரளான ஜனங்கள், அந்த அரங்கத்தை நிறைத்துவிட்டார்கள்!

அந்த சுவிசேஷ கூட்டத்தில் எங்களுக்கு மறக்க முடியாத ஒரு காட்சி என்னவெனில், ஒரு புத்தமத வயதான லாமா அங்கு வந்து தேவனை தொழுது கொண்டதுதான்! லாமாக்கள் அணியக்கூடிய உடையிலேயே அவர் வந்திருந்தார். தேவன் அந்த மனிதரை எப்படி சந்தித்தாரோ தெரியவில்லை. ஆனால் அவர் ஆண்டவரின் அடிமையாக அங்கே தனது முழங்கால்களை முடக்கியிருந்தார்.

ஒரு முழு உலகமே ஒன்று சேர்ந்து ஒரு புத்தமத லாமாவை இயேசுவண்டை வழி நடத்துவது என்பது கற்பனைகூட செய்து பார்க்க முடியாத காரியமாகும்! எனினும், தேவகரம் அந்த வைராக்கிய புத்த மார்க்கத்தானை நித்திய ஜீவனுக்கு சுதந்திரவாளியாகச் செய்திருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

பாருங்கள், **எந்த மனிதனையும் பிரகாசிக்கச் செய்கின்ற இயேசு!** என யோவான் முதலாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்த கடைசி நாட்களில், ஆத்துமாக்களை இரட்சிக்க, அவர்களின் இருள் நீக்கி ஒளிதர, தேவன் வல்லமையாய் கிரியை செய்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள்!

எத்தனை எதிர்ப்பு இருந்தாலும், யாரெல்லாம் தைரியமாய் இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்கிறார்களோ, அவர்களின் பிரயாசத்திற்கேற்ற பலனை, முன்பைவிட அதிகமாய் இந்நாட்களில் தந்திடுவார்! ஆம், வாலிபனே, நீயும் இரட்சிக்கப்படுவாய்.... உன் வீட்டார் அனைவரையும் தேவன் இரட்சிப்பார்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.